# போக்குவரத்துக் குற்றங்களுக்கு

# அபராதத்தில் சிறப்புக் கழிவு



## கோலாலம்பூர் மாநகர் மன்றம் அறிவிப்பு

கோலாலம்பூர், ஆக. 9-
போக்குவரத்துச் சம்மன்களுக்கும் இதர பொதுக் குற்றங்களுக்கும் அபராதம் செலுத்தப்படாமல் இருக்கும் சம்மன்களுக்கும் கோலாலம்பூர் மாநகர் மன்றம் செப்டம்பர் 30ஆம் தேதி வரை சிறப்புக் கழிவு வழங்குகிறது. சுதந்திர தினத்தை முன்னிட்டும் மலேசிய தினத்தை முன்னிட்டும் இந்தக் கழிவுத் தொகை அறிவிக்கப்படுகிறது.

பக்கம் 13

## முதல் பக்கத் தொடர்ச்சி

### போக்குவரத்துக் குற்றங்களுக்கு...

மோட்டார் சைக்கிள்களுக்கான சம்மன்களுக்கு சிறப்பு அபராதத் தொகையாக 10 ரிங்கிட்டும் கார்களுக்கும் சிறிய லோரிகளுக்கும் 20 ரிங்கிட்டும் பஸ்கள், பெரிய லோரிகளுக்கு 50 ரிங்கிட்டும் அபராதத் தொகை விதிக்கப் படுகிறது.

கறுப்புப் பட்டியலிடப்பட்ட வாகனங் களுக்கு இந்தச் சலுகை பொருந்தாது. உணவு அங்காடிக் கடைகளை வைத்திருப் போருக்கான பொதுக் குற்றங்களுக்கு 100 ரிங்கிட் சிறப்பு அபராதத் தொகை விதிக்கப்படுகிறது. ஆனால் வெளிநாட்டின ருக்கு இந்தச் சலுகை வழங்கப்படாது.